Bo இன் பெறுமதி நேரத்துடன் (t) படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றப்படுகிறது.




இச்சுருளுக்குரிய ஓட்ட (I) – நேர (t) வளையியை அண்ணளவாகக் கீறுக?




## பகுதி A – அமைப்புக் கட்டுரை – விடைகள்

1. (அ) $T = \frac{rh\rho g}{2}$

(ஆ) 1. முறையே NaOH அமிலம், வடிகட்டிய நீர் என்பவற்றால் கழுவுதல் வேண்டும்.

2. ஊசியின் கூரியமுனை, நீர்ப்பரப்புடன் ஏறக்குறைய தொடுகையுடன் இருக்கத்தக்கவாறு P ஐ பொருத்துதல் வேண்டும்.

3. முதலில் மிதப்பு வளையியின் அடிப்பாகமும் பின்னர் ஊசியின் கூரிய முனையும் இயக்கு நுணுக்குக் காட்டியில் குவிக்கப்பட்டு வாசிப்புக்கள் எடுக்கப்படல் வேண்டும். வாசிப்புக்களின் வித்தியாசம் உயரம் h ஐ தரும்.

(இ) 1. ஓர் ரசத் துளியின் திணிவையும் நீளத்தையும் (l) காண்பதன்மூலம்

$$(l\pi r^2 \rho g) = mg$$

2. இயங்கு நுணுக்குக் காட்டியைக்கொண்டு மயிர்த்துளைக்குழாயின் துவாரத்தின் ஆரையை நேரடியாகக் காணுதல்.

பின்னர் குழாயை 90° ஊடாக திருப்பி இன்னோர் அளவீட்டை எடுத்து சராசரி காண்க?

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

(ஈ) $T = \frac{1}{2}rh\rho g = \frac{1}{2} \times 0.2 \times 10^{-3} \times 1000 \times \frac{9.8}{10} \times 7.2 \times 10^{-2}$

$= 7.02 \times 10^{-2}\ Nm^{-1}$

(உ) h = 7.2 சமீ அல்லது மாற்றமில்லை

(ஊ) h = 3.6 சமீ இல் ⟶ $2\pi rT\cos\theta = h'\rho g r^2$

$T = \frac{1}{2}hr\rho g$

$\cos\theta = \frac{h'}{h} = \frac{1}{2}$

$\theta = 60°$




(எ) $h' = 0 \longrightarrow \cos\theta = 0 \therefore \theta = \pi/2$

∴ மிதப்பு வளைவு ஓர் தளப்பரப்பாகும்



2. (அ) $1/V - 1/U = 1/f$ ஐ பிரயோகிக்க $1/V - 1/4 = -1/3$

$\therefore 1/V = -1/12$

V = 12 சமீ ⟶ $L_1$ இன் வலப்பக்கத்தில்

(ஆ) $1/V - 1/U = 1/f$ $V = 12$

$L_1$, $L_2$ இற்கு இடைப்பட்ட தூரம் $= V + f_2 = 22$ cm




(இ) $m = \frac{\alpha'}{\alpha} = \frac{h'/f2}{h/D} = \frac{h'}{h} \times \frac{D}{f_2}$

$\frac{h'}{h} = \frac{V}{U} = -(\frac{V}{f_1} - 1) = (1 - \frac{V}{f_1})$

$m = \frac{D}{f_2}(1 - \frac{V}{f_1}) = \frac{25}{10}(1 - \frac{12}{8}) = 7.5$

(ஈ) $L_2$ இன் இடப்பக்கத்தில் 25சமீ தூரத்தில் (உருப்பெருத்த தலைகீழ் விம்பம்)

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

(உ)




(ஊ)1. "கண்வளையம்" என்பது கண்ணாடி $L_2$ இல் பொருள்வில்லை $L_1$ இன் விம்பம் ஆகும்.

2. கண்ணாடியில் உண்டாகும் பொருள் வில்லையின் விம்பத்தினூடாக, பொருளில் இருந்து வரும் எல்லாக் கதிர்களுமே கடந்துசெல்வதனால்.

(எ)1. கூட்டு நுணுக்குக்காட்டி இரண்டு ஒருங்கு வில்லைகளை இரண்டும் குறுகிய குவியத்தூரம்-- கொண்டுள்ளது. வானியல் தொலைகாட்டியில் இவ்வில்லைகளின் குவியத்தூரங்களுக்கிடையே அதிக வித்தியாசம் உண்டு. பொருள் வில்லையின் குவியத்தூரம் மிகவும் கூடியது.

2. கூட்டு நுணுக்குக்காட்டியில் பொருள் ஓர் முடிவுள்ள தூரத்திலேயே வைக்கப்படுகிறது. ஆனால் வானியல் தொலைகாட்டியில் பொருள் முடிவிலி தூரத்தில் இருக்கின்றது. அல்லது வழமையான செப்பஞ்செய்த நிலையில் பொருளும் விம்பமும் முடிவிலி தூரத்தில் உள்ளன.

3,(அ)1. மின்பகுப்பின்போது, மின்வாய் ஒன்றில் விடுவிக்கப்பட்ட பதார்த்தத்தின் திணிவு, கடத்தப்பட்ட மொத்த மின்னேற்றத்துக்கு நேர் விகித சமமானது.

2. விடுவிக்கப்பட்ட திணிவு அப்பதார்த்தத்தின் இரசாயனச் சமவலுவிற்கு நேர்விகித சமமானது.

(ஆ)




(இ) 1. 1ம்விதியிலிருந்து $m = eit$ , $m$ = விடுவிக்கப்பட்ட திணிவு

$i$ = மின்னோட்டம் , $t$ = நேரம்

மாறிலியாக இருக்க 30 நிமிட இடைவெளிக்கு $n$ ஐ அளக்க.

2. $n$ ஐ திருத்தமாக அளவிடுவதற்கு முதலில் கதோட்டை நீர்த்திவலையில் கழுவி, பின்னர் வெப்பக் காற்றில் உலர்த்தி அட்டிய மில்லி கிராமுக்குத் திருத்தமாக நிறுக்குக.

மாறும் தடையை சரிசெய்வதன் மூலம் மின்னோட்டம் $i$ ஐ மாறிலியாக வைத்திருக்க.

Scanned with CamScanner

3. கதோட்டு

4. $CuSO_4 \longrightarrow Cu^{2+} + SO_4^{2-}$

$H_2O \longrightarrow H^+ + OH^-$

$Cu^{2+} + 2e \longrightarrow Cu$ ; or $Cu^{2+} \longrightarrow Cu - 2e$

(உ) பரடேயின் 1ம் விதியிலிருந்து $m = eit$

$it = 1C$ ஆகும் போது $m = e$

$$m = e = \frac{31.8}{9.65 \times 10^4} \text{ gm}$$

( பரடேயின் ... )
(ஊ) அம்பியர்மானியின் வாசிப்பு ஒரு குறித்த பெறுமதியாக இருக்க. ( $i_q$ என்க)
தெரிந்த நேரம் t இல் விடுவிக்கப்பட்ட திணிவு m ஐ அளக்குக. e இன் பெறுமதியை தெரியும் எனக்கொண்டு $m = eit$ என்னும் சமன்பாட்டில் உண்மையான மின்னோட்டம் i ஐ துணிக்குக.

எல்லா இயல்தகு A மானியின் முழு அளவுச்சட்ட வாசிப்புக்களுக்கும் இப்பரிசோதனையை மீட்டல் செய்க.

$i$ Vs $i_q$ வரைபு வரைக

4. (a) $\rho = \frac{RA}{l}$

(b) $\frac{RC}{RL} = \left(\frac{e}{L}\right)^2$

(c) $B = \frac{\mu_0 \pi I}{l}$

(d) $B = \frac{\mu_0 N^2 I \pi}{l}$

(e) $\frac{Il^2}{4\pi N}$

(f) 1. 0

2. $\frac{Il^2 B g \cos\theta}{4\pi N}$



P II 2

உயர் கல்விப் பதிப்பகம்.

36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல் 11, க.பொ.த (உயர்தரம்) மாதிரிவிடைகள், ஓகஸ்ட், 1983.

பகுதி B – அமைப்புக்கட்டுரை -MUFAS-

$g = 10\ N\ kg^{-1}$

1. (அ) அல்லது (ஆ) விற்கு விடை தருக.

(அ) நியூற்றனின் இயக்க விதிகளைக் கூறுக?

நிலைக்குத்துடன் $\alpha$ கோணத்தில் சாய்ந்துள்ள ஒப்பமான (அழுத்தமான) தளமொன்றில் பொருளொன்று கீழே வழுக்குகிறது. இப்பொருளின் ஆர்முடுகலைத் துணிவதற்கு இவ்விதிகளைப் பாவிக்குக.




A யும் B யும், ஒரே திணிவு m ஐ உடைய இரு துணிக்கைகளாகும். படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, நிலையான ஆப்பொன்றின் மேற்பகுதியில் உள்ள ஒரு சிறிய ஒப்பமான கப்பி P யின் மேற்செல்லும் 1 நீளமுடைய பாரமற்ற விரிவடையா இழையொன்றின் முனைகளுக்கு இத்திணிவுகள் இணைக்கப்பட்டுள்ளன. A யும் B யும் கப்பிக்கு மேலாக இழை தொய்வாக இருக்கும்வகையில் P க்கு அருகில் பிடிக்கப்பட்டு t = 0 நேரத்தில் விடுவிக்கப்படுகின்றன. நிலைக்குத்துடன் $\alpha$ கோணத்தை ஆக்கும் ஆப்பின் ஒப்பமான முகம் வழியே A வழுக்குகையில் B சுயமாக விழுகிறது. எந்நேரத்தில் இவ்விழை இறுக்கமாக வரும்? இவ்வேளையில் B எவ்வளவு தூரம் விழுந்திருக்கும்? இழை இறுக்கமாக வந்த சிறிது நேரத்தின் பின்னர், இழை கப்பியின் மேலிருக்கும் வகையில், திணிவுகள் மாறுவார்முடுகலுடன் அசைகின்றன.

(அ) இத்தொகுதியின் ஆர்முடுகலையும்,
(ஆ) கப்பியின்மீது இழையினால் ஏற்படுத்தப்படும் விசையின் பருமன், திசை ஆகியவற்றையும் காண்க?

(ஆ) மீள்தன்மையின் உகின் விதியைக் கூறுக?

1 இயற்கை நீளமுடைய பாரமற்ற மீளியல் இழையொன்றின் முனை, ஒரு புள்ளி P யிற்குப் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விழை நிலைக்குத்தாக புள்ளி P யிற்குப் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விழை நிலைக்குத்தாக இருக்கும் வகையில் மறுமுனையிலிருந்து ஒரு திணிவு m தொங்குகிறது. இவ்விழையின் விரிவு e ஆகக் காணப்படுகிறது. இப்போது இத்திணிவு m மேலே கொண்டுவரப்பட்டு P யில் பிடித்து வைக்கப்பட்டு t = 0 நேரத்தில் சுயாதீனமாக விழவிடப்படுகிறது. இழையின் உயர் விரிவுக்கோவை ஒன்றைத் தரப்பட்டுள்ள கணியங்களில் தருவிக்குக. ஈர்த்தலில் சக்தி இழப்புகள் இல்லையெனக் கருதுக. t = to நேரத்தில் இத்திணிவு P க்கு முதல்தரம் திரும்பி வருகிறது. எவ்வளவு நேரத்துக்கு இவ்விழை ஈர்க்கப்பட்ட நிலையிலிருந்திருக்கும். P க்குக் கீழே நிலைக்குத்தாக 1 தூரத்திலுள்ள புள்ளி Q என்க. P யிலிருந்து Q வுக்கும் Q விலிருந்து P யிற்குமான இரு கட்டங்களுக்குமுரிய திணிவினது வேக – நேர வளையிகளை ஒரு வரைபில் அண்ணளவாக வரைக. உமது வரைபில், P, Q ஆகியவற்றில் திணிவு இருக்கும்பொழுதுள்ள நேரங்களையும், உயர் விரிவு ஏற்படும் நேரத்தையும் சுட்டிக்காட்டுக.

விடை:-

1. (அ) விதி: 1. புறவிசைகள் தாக்கினாலன்றி ஓய்வு நிலையில் உள்ள பொருள் ஓய்வுநிலையிலும், ஓர் நேர்கோட்டில் மாறா இயக்கநிலையில் உள்ள பொருள் மாறா இயக்க நிலையிலும் நிலைநிற்கும்.

2. உந்தமாற்றவீதம் அழுத்திய விசைக்கு நேர்விகிதசமமாய் அவ்விசை தாக்கும் நேர்கோட்டுத் திசையில் நிகழும்.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

3. தாக்கமும் மறுதாக்கமும் எப்பொழுதும் சமமும் எதிருமானவை.




இரண்டாம் விதிப்படி: 




$mg \cos\alpha = mf \Longrightarrow f = g \cos\alpha$




இழை இறுக்கமாக வர எடுத்த நேரம் $t_1$ என்க. அப்பொழுது B சென்ற தூரம் $S_1$, A அதே சாய்தளவழியே சென்ற தூரம் $S_2$ என்க.

எனின் $S_1 = \frac{1}{2}gt_1^2$ ——— (1)

$S_2 = \frac{1}{2}g \cos\alpha \, t_1^2$ ——— (2)

$(1) + (2) \longrightarrow S_1 + S_2 = l = \frac{1}{2}g(1 + \cos\alpha)t_1^2$

$\therefore t_1 = \left[\frac{2l}{g(1 + \cos\alpha)}\right]^{\frac{1}{2}}$ $\qquad S_1 = \frac{1}{2}g \frac{2l}{g(1 + \cos\alpha)}$

$= \frac{l}{(1 + \cos\alpha)}$

ஆர்முடுகல் f ↗↓ என்க

நியூற்றனின் 2ம் விதிப்படி B↓ $\qquad mg - T = mf$ ——— (3)

A↗ $\qquad T - mg \cos\alpha = mf$ ——— (4)

$(3) + (4) \longrightarrow mg(1 - \cos\alpha) = 2mf$

$f = g/2\,(1 - \cos\alpha)$

(3) இலிருந்து $\qquad T = m(g - f)$

$= m(g - g/2 + g/2 \cos\alpha)$

$= \frac{mg}{2}(1 + \cos\alpha)$

கீழ்நோக்கிய நிலைக்குத்துடன் விளையுள் ஆக்கும் கோணம் β எனின்




$\tan\beta = \frac{T \sin\alpha}{T + T \cos\alpha} = \frac{\sin\alpha}{(1 + \cos\alpha)}$

$= \tan^{-1}\left[\frac{\sin\alpha}{1 + \cos\alpha}\right]$



www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

$$= mg/2\ (1 + \cos\alpha)\ (2 + 2\cos\alpha)^{\frac{1}{2}}$$

$$= mg\sqrt{\tfrac{1}{2}}\ (1 + \cos\alpha)^{3/2}$$

(ஆ) மீள்தன்மை எல்லைக்குள், கம்பியொன்றில் ஏற்படும் நீட்சி அதன் இழுவிசைக்கு அல்லது ஏற்றப்படும் சுமைக்கு நேர்விகித சமமானது.

$$Y = F/A \times \frac{L}{e} \qquad\qquad F = \frac{YA.e}{L} = Ke$$

Y = நீள்தன்மை மட்டு அல்லது மீள்தன்மைக் குணகம்.




$mg = Ke$ $\qquad$ x = இழையின் அதிகூடிய நீட்சி என்க.

$$\therefore K = \frac{mg}{e}$$

ஆரம்ப அ.சக்தி $= mg(1 + x)$

ஆரம்ப இ.ப.சக்தி $= 0$

இறுதியாக சேமிக்கப்பட்ட சக்தி $= \frac{1}{2}\lambda x^2 = \frac{1}{2}\frac{mg}{e} x^2$

சக்திக்காப்பு விதிப்படி $\quad mg(1 + x) = \frac{1}{2}\frac{mg}{e} x^2$

$$x^2 - 2ex - 2el = 0$$

$$x = \frac{2e + \sqrt{4e^2 + 8el}}{2} = e \pm \sqrt{e^2 + 2el}$$

தூரம் 1 இனூடாக திணிவு விழுவதற்கு எடுத்த நேரம் t என்க.

$$m\downarrow \quad l = \tfrac{1}{2}gt^2 \Longrightarrow t = \left(\frac{2l}{g}\right)^{\frac{1}{2}}$$

P இற்குத் திரும்பச் செல்லத் திணிவுக்கு எடுத்த நேரம் = t

புவியீர்ப்பின் கீழ் இயக்கத்துக்கு எடுத்த மொத்த நேரம் $= 2t = 2\left(\frac{2l}{g}\right)^{\frac{1}{2}}$

இழை ஈர்க்கப்பட்ட நிலையில் இருக்கும் நேரம் $= t_o - 2t = t_o - 2\left(\frac{2l}{g}\right)^{\frac{1}{2}}$




Scanned with CamScanner

(2) $f_1$ , $f_2$ ஆகிய குவிய நீளங்களையுடைய இரு மெல்லிய வில்லைகள், அவற்றின் தலைமையச்சுக்கள் பொருந்தும்வகையில் தொடுகையில் வைக்கப்பட்டுள்ளன. இச்சேர்மானம் f குவிய நீளமுடைய ஒற்றை வில்லையொன்றுக்குச் சமவலுவானதாகும். மெல்லிய வில்லைச் சூத்திரத்திலிருந்து ஆரம்பித்து

$$\frac{1}{f} = \frac{1}{f_1} + \frac{1}{f_2}$$

என நிறுவுக. பாவித்த குறிவழக்கைத் தெளிவாகக் கூறுக?

$a n_g$ முறிவுச்சுட்டியையுடைய கண்ணாடியைக் கொண்டு குவிவுவில்லையொன்று செய்யப்பட்டுள்ளது. வளியில் அதன் குவிய நீளம் fa ஆகும். $a n_s$ முறிவுச்சுட்டியையுடைய திரவமொன்றினுள் இவ்வில்லை அமிழ்த்தப்பட்டிருக்கும்பொழுது அதன் குவிய நீளம் fs இற்குக் கோவையொன்றை எழுதுக?




படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முகவையொன்றினுள் வைக்கப்பட்டுள்ள தளவாடியொன்றின் மேல், 20சமீ குவிய நீளச் (வளியில்) சமக்குவிவு வில்லையொன்று வைக்கப்பட்டுள்ளது. இப்போது $a n_s$ முறிவுச் சுட்டியையுடைய திரவமொன்று முகவையினுள் h உயரத்திற்கு ஊற்றப்படுகிறது. வில்லைக்கு மேல் d தூரத்தில் வைக்கப்படும் ஒரு ஊசி P அதன் தெளிவான விம்பம் I (மேலிருந்து நோக்குகையில்) ஊசியுடன் பொருந்தும் வரை, செப்பஞ் செய்யப்படுகிறது. இவ்விம்பம் I இனது உருவாக்கத்தைக் காட்டும் கதிர் வரிப்படமொன்றை வரைந்து

d, h , $a n_s$ திரவத்தினுள் வில்லையின் குவிய நீளம் ஆகியவற்றுக்கிடையிலுள்ள தொடர்பைத் தருவிக்குக?

பரிசோதனையொன்றில்; பின்வரும் வாசிப்புகள் பெறப்பட்டன:-

| h cm | d cm |
|---|---|
| 10 | 35 |
| 16 | 36 |

மேலுள்ள தரவுகளைப் பாவித்துப் பின்வருவனவற்றைக் காண்க:

1. திரவத்தின் முறிவுச்சுட்டி 2. கண்ணாடியின் முறிவுச் சுட்டி
3. வில்லை மேற்பரப்பினது வளைவினாரை.

விடை :-

2.




www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner




வில் லைச் சமன்பாடு $\frac{1}{V} - \frac{1}{U} = \frac{1}{f}$

காட்டீசன் குறிவழக்குப்படி, 1ம் வில்லைக்கு $U = +$, $V_1 = -$, $f_1 = -$

$$-\frac{1}{V_1} - \frac{1}{U} = -\frac{1}{f_1} \qquad \frac{1}{V} + \frac{1}{U} = \frac{1}{f_1} \quad \text{———} (1)$$

2ம் வில்லைக்கு $V_1 = (-)$ , $V = (-)$, $f_2 = (-)$

$$\frac{1}{-V} - \frac{1}{-V_1} = \frac{1}{-f_2} \qquad -\frac{1}{V} + \frac{1}{V_1} = -\frac{1}{f_2} \quad \text{———} (2)$$

$$(1) - (2) \Longrightarrow \frac{1}{V} + \frac{1}{U} = \frac{1}{f_1} + \frac{1}{f_2} \quad \text{———} (3)$$

வில்லைச் சமன்பாட்டை சமமான வில்லைக்குப் பிரதியிட

$U = (+)$, $V = (-)$ , $f = (-)$

$$-\frac{1}{V} - \frac{1}{U} = \frac{1}{-f} \qquad \frac{1}{V} + \frac{1}{U} = \frac{1}{f} \quad \text{———} (4)$$

∴ (3), (4) இருந்து $\frac{1}{f} = \frac{1}{f_1} + \frac{1}{f_2}$

$$\frac{1}{f_s} = \left( \frac{{}_an_g}{{}_an_s} - 1 \right) \left( \frac{1}{r_1} - \frac{1}{r_2} \right)$$

$$\frac{1}{f_a} = ( {}_an_g - 1 ) ( 1/r_1 - 1/r_2 )$$

$$\frac{f_s}{f_a} = \frac{({}_an_g - 1)}{\left[ \frac{{}_an_g}{{}_an_s} - 1 \right]}$$

$$f_s = \left[ \frac{{}_an_g - 1}{\frac{{}_an_g}{{}_an_s} - 1} \right] f_a$$

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner




$$\frac{f_s - h}{d - h} = an_s$$

$$\frac{f_s - 10}{25} = an_s$$

$$f_s = 25\,an_s + 10 \quad \text{——(1)}$$

$$\frac{f_s - 16}{20} = an_s$$

$$f_s = 20\,an_s + 16 \quad \text{——(2)}$$

$$5\,an_s = 6 \qquad \therefore f = 30 + 10$$

$$an_s = 1.2 \qquad = 40 \text{ cm}$$

இதை (1) இல் பிரதியிட

$$\frac{1}{f_s} = -\left(\frac{an_g}{an_s} - 1\right)\left(\frac{2}{r}\right)$$

$$\frac{1}{f_s} = -\left(\frac{an_g}{1.2} - 1\right)\left(\frac{2}{r}\right)$$

$$\frac{1}{f_a} = -(an_g - 1)(2/r)$$

$$1/40 = -\left(\frac{an_g}{1.2} - 1\right)(2/r)$$

$$1/20 = -(an_g - 1)(2/r)$$

$$\therefore 2 = \frac{(an_g - 1)}{(an_g - 1.2)}\,1.2$$

$$2\,an_g - 2.4 = 1.2\,an_g - 1.2$$

$$0.8\,an_g = 1.2$$

$$an_g = \frac{1.2}{0.8} = 3/2$$

$$(1.5 - 1)\,2/r = -1/20$$

$$r = 20 \text{ cm}$$

3. (அ) அல்லது (ஆ) பகுதிக்கு விடை தருக.

(அ) போயிலின் விதியையும், சாள்சின் விதியையும் கூறி, இலட்சிய வாயு ஒன்றின் நிலைச்சமன்பாட்டைப்பெற அவற்றை எவ்விதம் ஒன்றுசேர்க்கலாமெனக் காட்டுக?

50 $cm^2$ குறுக்குவெட்டுப் பரப்பளவையுடைய நிலைக்குத்தான தாங்கி ஒன்றின் மேல்முனை, நிலைக்குத்து நாணொன்றில் நிலையாகப் பிடிக்கப்பட்டுள்ள 10 kg திணிவுடைய முசலம் (அடைப்பு) ஒன்றினால் மூடப்பட்டு உள்ளது. இந்நிலையில் உருளையினுள் உள்ளடக்கப்படும் வெளியின் உயரம் 2 m ஆகும். ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் ஆகியவற்றைக் கொண்ட கலவையொன்றினால் இத்தாங்கியானது வெப்பநிலையான 27 °C இல் நிரப்பப்படுகிறது. அதே வெப்பநிலையில் இக்கலவையிலுள்ள வாயுக்கள் முறையே

$2.1 \times 10^4\ Nm^{-2}$ அமுக்கத்தில் $0.01\ m^3$ கனவளவையும் $1 \times 10^4\ Nm^{-2}$ அமுக்கத்தில் $0.024\ m^3$ கனவளவையும் $3 \times 10^4\ Nm^{-2}$ அமுக்கத்தில் $0.02\ m^3$ கனவளவையும் தனியாக கொள்ளக்கூடிய வகையிலான திணிவுகளைக் கொண்டுள்ளன. இக்கலவையிலுள்ள இம்மூன்று வாயுக்களினதும் பகுதியமுக்கங்களையும், கலவையின் மொத்தவமுக்கத்தையும் கணிக்குக?

ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் ஆகியவற்றின் மூலக்கூற்று நிறைகள் முறையே 2, 32, 28 ஆயின் கலவையின் மொத்தத் திணிவைக் கணிக்குக?

இவ்வாயுக்கலவை, நாண் மட்டுமட்டாகத் தொடுவான் வரும் வரையில் இப்போது சூடாக்கப்படுகிறது. தாங்கியிலிருந்து வாயு வெளியேறவில்லையெனக் கருதி, இக்கட்டத்தில் வாயுக்கலவையினது வெப்பநிலையைக் கணிக்குக?

( வளிமண்டல அமுக்கம் = $1.0 \times 10^5\ Nm^{-2}$ , R = 8.3 $J K^{-1} mol^{-1}$

(ஆ) அநேகமான கலோரிமானிப் பரிசோதனைகளில் திருத்தமற்ற முடிவுகளைக் கொடுக்கும் முக்கிய காரணி சூழலுடன் நடைபெறும் வெப்பப் பரிமாற்றமாகும். இது நடைபெறும் முறைகள் யாவை? இம்முறைகளைப் பாதிக்கும் காரணிகள் யாவை? இம்முறைகளை ஆளும் விதிகளை எழுதியபின் கூறுக? இவ்விதிகளில் எவற்றை வெற்றிடத்திலுள்ள சூடான பொருள் ஒன்றுக்குப் பிரயோகிக்க முடியாது? விளக்குக?

பின்வரும் பரிசோதனைகள் ஒவ்வொன்றிலும் சூழலுடன் நடைபெறும் வெப்பப் பரிமாற்ற விளைவினாலான வழுக்களை இழிதாக்குவதற்கு நீர் பாவிக்கக்கூடிய முற்காப்புக்களைத் தருக?

1. பனிக்கட்டியின் உருகல் மறைவெப்பத்தைக் கலவை முறையினால் துணிதல்
2. திரவமொன்றின் தன்வெப்பக் கொள்ளளவை தொடர்ச்சியான பாய்ச்சல் முறையினால் துணிதல்.
3. இரு திரவங்களின் தன்வெப்பக் கொள்ளளவுகளைக் குளிரல் முறையினால் ஒப்பிடுதல்.

விடை:-

3. (அ)




(a) (b) (c)

போயிலின் விதி:- திணிவு m , T மாறிலி

$P \propto 1/V$

சாள்சின் விதி:- m, P மாறிலி

$\therefore V \propto T$

P - அமுக்கம்

V - கனவளவு

T - தன்வெப்பநிலை

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

(a) ⟶ (b) $\frac{V_1}{T_1} = \frac{V'}{T_2}$ $\frac{V_1}{V'} = \frac{T_1}{T_2}$ ——— (1)

(b) ⟶ (c) $P_1V' = P_2V_2$ ——— (2)

(1), (2) $V' = \frac{V_1T_2}{T_1} = \frac{P_2V_2}{P_1}$ $\therefore \frac{P_1V_1}{T_1} = \frac{P_2V_2}{T_2}$ //

$\frac{PV}{T} = K$ மாறிலி (குறித்த திணிவுள்ள (m) இலட்சியவாயுவிற்கு)

m — 1 கிராம் மூலக்கூறு அல்லது 1 மூல் இலட்சியவாயுவிற்கு அவகாதரோவின் $6.02 \times 10^{23}$ ம் எல்லா வாயுக்களும் 1 கிராம் மூலக்கூறிலிருக்கும் மூலக்கூறுகளின் எண்ணிக்கை ஒரேயளவாகும்.

∴ ஒரே வெப்பநிலை ஒரே அமுக்கத்திலிருக்கும் எல்லா வாயுக்களிலும் 1 கி மூலக்கூறு ஒரே கனவளவு Vo ஐ அடைகின்றன.

P = 76 cm இரசம்

T = 273°K இல் Vo = 22.4 இலீற்றர்

1 கிராம் மூலக்கூறு இலட்சியவாயுவின் கனவளவு V எனின்

$\frac{PV}{T} = R$ — சர்வதேச வாயு மாறிலி

வாயுவிற்கு $PV = nRT$

$n = \frac{m}{M}$ (m — திணிவு; M — மூலக்கூற்றுத் திணிவு)

(மூல் — மூலக்கூற்றுத் திணிவிற்கு சமமான கிராம் வாயுவின் அளவு)

பாத்திரத்தின் கனவளவு $= (50 \times 2 \times 10^{-4}) = 0.01\ m^3$

$P_{H_2} = \frac{0.021 \times 1 \times 10^4}{0.01} = 2.1 \times 10^4\ Nm^2$

$P_{O_2} = \frac{0.024 \times 1 \times 10^4}{0.01} = 2.4 \times 10^4\ Nm^{-2}$

$P_{N_2} = \frac{0.02 \quad 3 \quad 10^4}{0.01} = 6.0 \times 10^4\ Nm^{-2}$

மொத்த அமுக்கம் $= 10.5 \times 10^4 = 1.05 \times 10^5\ Nm^{-2}$

$M_{H_2} = \frac{2.1 \times 10^4 \times 0.01}{8.3 \times 300} = \frac{7}{83}$ மூல்கள்

$M_{O_2} = \frac{2.4 \times 10^4 \times 0.01}{8.3 \times 300} = 8/83$ mol

$M = \frac{6.0 \times 10^4 \times 0.01}{8.3 \times 300} = 20/83$ moles

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

$M_{H_2} = \left(\frac{7}{83} \times 2\right) = \frac{14}{83}$ கிராம்

$M_{O_2} = \left(\frac{8}{83} \times 32\right) = \frac{256}{83}$ கிராம்

$M_{N_2} = \left(\frac{20}{83} \times 28\right) = \frac{560}{83}$ கிராம்

மொத்தத் திணிவு M = 10 கிராம்

மொத்தத் அமுக்கம் = வளிமண்டலவமுக்கம் + முசலத்தினல் அமுக்கம்

$$= 10^5 + \frac{10 \times 10^2}{50} \times 10^4$$

$$= 10^5 + 0.2 \times 10^5 \ Nm^{-2}$$

$$= 1.2 \times 10^5 \ Nm^{-2}$$

$$\frac{1.05 \times 10^5 \times 0.01}{300} = \frac{1.2 \times 10^5 \times 0.01}{T}$$

$$T = \frac{1.2 \times 300}{1.05} = 343 \ ^\circ K = 70^\circ C$$

(ஆ) கலோரிப் பரிசோதனைகளில் சூழலுடன் கூடிட வெப்பப் பரிமாற்றம் நடைபெறும் முறைகளாவன:-

1. கலோரிமானிச் சுவர்களினூடான கடத்தல்
2. சூழலிலுள்ள வளியுடன் மேற்காவுகை
3. கதிர்வீசல்

1. கடத்தல்: வெப்பம் கடத்தப்படும் வீதம் = Q/t

$Q/t \propto K$ (கலோரிப் பதார்த்தத்தின் வெப்பக்கடத்துதிறன்)

$\propto A$ (கலோரிமானியின் வெளிமேற்பரப்பு)

$\propto dQ/dx$ (கலோரிமானிச் சுவர்களுக்கிடையேயுள்ள வெப்ப நிலைப் படித்திறன்)

2. மேற்காவுகை: ஓர் உடல் வளிக்கு இழக்கும் வெப்பம் நியூற்றனின் குளிரல் விதி.

ஓர் உடல் சூழலுக்கு குளிரும்போது வெப்ப இழப்பு வீதம் சூழலின் மேல் உள்ள மேலதிக வெப்பநிலைக்கு நேர்விகித சமமாகும்.

3. வெப்பநிலை T இல், 1 செக்கன் நேரத்தில் $1 \ m^2$ பரப்பிலிருந்து கதிர் வீசலானது காலப்பட்ட மொத்த வெப்பசக்தி E எனின்,

$E = \sigma T^4$ ஸ்ரீபனின் (stefan's) விதி.

வெற்றிடத்தில் குளிரவிடப்படும் சூடான உடலொன்றின் வெப்ப இழப்பு கதிர்வீசலால் மாத்திரம் ஏற்படுகின்றது. வெற்றிடத்தில், கடத்தலுக்கு உலோக ஊடகமும், மேற்காவுகைக்கு வளியும் இல்லை ஆகையால், கடத்தல், மேற்காவுகை சம்பந்தமான விதிகள் பாவிக்கப்பட முடியாதவை ஆகும்.

1. அறைவெப்பநிலை $\theta_R$ க்கு சிறிது கூடிய வெப்பநிலை $\theta_1$ இல் உள்ள சூடான நீரை கலோரிமானியுள் எடுக்க. பின்னர் மையொற்றுத் தாளினால் ஒற்றி உலர்த்திய பனிக்கட்டித் துண்டுகள் சிலவற்றை, கலவையின் வெப்பநிலை $\theta_R$ இலும் குறைவாகவும் $\theta_1$ $\theta_R$ இன் வித்தியாசத்துக்கு சமமாக இருக்கத் தக்கதாகவும், வரும்வரை சேர்க்குக. இந்நிலையில் குளிரல் திருத்தம் அவசியமற்றது.

Scanned with CamScanner

2. t செக்கனில் கலோரிமானியை விட்டு வெளியேறும் திரவத்தின் திணிவு m அளக்கப்படுகிறது. நீர் கலோரிமானியினுள் செல்லுகையில் வெப்பநிலை $\theta_1$ உம் வெளியேறுகையில் $\theta_2$ உம் என்க. திரவத்தின் சராசரித் தன்

வெப்பக் கொள்ளளவு $C_L$ எனின்,

திரவம் பெற்ற வெப்பக் கணியம் $Q = mc_L(\theta_2 - \theta_1)$ joule

இவ்வெப்பசக்தி, V மின்னழுத்த வேறுபாட்டில் I மின்னோட்டம் பாயும் வெப்பமாக்கும் சுருள் R இனால் வழங்கப்படுகின்றது. I , V என்பன அழுத்தமானியால் அளக்கப்படுகின்றன. I ஆனது அம்பியரிலும், V ஆனது உவோற்றிலும் அளக்கப்படின், t செக்கன் நேரத்தில் சுருள் R இற்கு வழங்கப்பட்ட சக்தி IV யூல்களாகும்.

$$mC_L(\theta_2 - \theta_1) = IVt$$

$$\therefore \quad C_L = \frac{IVt}{(\theta_2 - \theta_1)m}$$

வழுவை இழிவாக்கி மிகக்கூடிய திருத்தத்தைப் பெறுவதற்கு தொடர்ந்தபாய்ச்சல் கலோரிமானியிலிருந்து கடத்தலாலும் கதிர்வீச்சாலும் சூழலுக்கு ஏற்படும்சிறிய வெப்ப இழப்புக்களும் தவிர்க்கப்படல் வேண்டும்.

சூழலின் வெப்பநிலை மாறாதிருக்க, கொடுக்கப்பட்ட $\theta_1$, $\theta_2$ சோடி வெப்பநிலைகளுக்கு 1 செக்கனில் இழக்கப்பட்ட வெப்பக்கணியம் h என்க. மேலும் 1 செக்கனில் பாயும் திரவத்தின் திணிவு m ஆயின், சுருள் R இனால் வழங்கப்பட்ட வெப்பக் கணியம்,

$$IV = mC_L(\theta_2 - \theta_1) + h \quad \text{------}(1)$$

இனி நீரின் பாய்ச்சல் வீதம் முன்னையதிலும் 2 அல்லது ½ பங்காகச் சரி செய்யப்படும். (1 செக்கனில் வெளியேறும் திரவத்தின் திணிவு m என்க.) எனின் $\theta_1$, $\theta_2$ மாற்றமடையுமாகையால் இவை மாறாதிருக்க, மின்னோட்டம் I, V சரிசெய்யப்படும். அதே வெப்பநிலைகள் $\theta_1$, $\theta_2$ இற்கு புதிய மின்னோட்டமும் அழுத்த வேறுபாடும் I', V' என்க.

எனில் $I'V' = mC(\theta_2 - \theta_1) + h \quad \text{------}(2)$

குறிப்பு: h மாறிலி, ஏனெனில் திரவத்தின் சராசரி வெப்பநிலை ஒவ்வொருமுறையும் ஒரேயளவாகும்.

$$IV - I'V' = (m - m')\,C_L(\theta_2 - \theta_1)$$

$$\therefore \quad C_L = \frac{IV - I'V'}{(\theta_2 - \theta_1)(m - m')}$$

3. வெப்ப இழப்புக்கள் பின்வரும் முறைகளினால் குறைக்கப்படலாம்:-

1. இரு சர்வசமனான கலோரிமானிகளைப் பயன்படுத்துவதன் மூலம்.
2. ஒரே கனவளவு திரவங்களைப் பயன்படுத்தலின் மூலம் (ஏனெனில், சூழலுக்குத் திறக்கப்பட்ட வெளிமேற்பரப்பு சமனாகையால், காலற்றிறன் ஒரேயளவாகும்.)
3. ஒரு சீரான வெப்பநிலையில் உள்ள சூழலைக் கொண்ட காப்புக் கலத்தினுள் கலோரிமானியை வைத்தல்.
4. ஒரே சூழலின் மேல் உள்ள மேலதிக வெப்பநிலைக்கு இரு திரவங்களினதும் வெப்பநிலை இழப்பு வீதத்தைக் கணிக்க.

அல்லது,

ஒரே வெப்பநிலை வீச்சுக்கு இரு திரவங்களினதும் வெப்பநிலை இழப்பு வீதத்தைக் கணிக்குக.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

ஒரு செக்கனில் இழந்த வெப்பம் h எனின்

$$(MS + M_1S_1)\frac{(\theta_1 - \theta_2)}{t_1} + h = (M.S + M_2S_2)\frac{(\theta_1 - \theta_2)}{t_2} + h$$

நியூற்றனின்

$$h \propto \left(\frac{(\theta_1 + \theta_2)}{2} - \theta_R\right)$$

குளிரல் விதியிலிருந்து




4. (அ) அல்லது (ஆ) வுக்கு விடை தருக.

(அ) வளியில் ஒலியின் வேகத்தைக் காண்பதற்கு பரிசோதனையொன்றை விபரிக்குக? ஒரு முனை மூடிய குழலொன்றிலுள்ள வளிநிரலில் ஏற்படக்கூடிய அதிர்வின் முதல் மூன்று வகைகளை வரைக?

இவ்வகைக் குழலொன்றின் திறந்த முனைக்கு நேரே ஒலிபெருக்கி ஒன்று பொருத்தப்பட்டு மாறும் மீடிறன் மூலமொன்றிலிருந்து ஊட்டப்படுகிறது. பரிவு பெறக்கூடிய அதிகுறைந்த மீடிறன் 170 Hz ஆகும். இக் குழலின் திறந்துள்ள முனைக்கு ஒத்த குழலின் இன்னுமொரு 18 சமீ நீளப்பகுதி மூடப்பட்டு இப்பரிசோதனை திரும்பவும் செய்யப்படுகிறது. பரிவு பெறக்கூடிய அதிகுறைந்த மீடிறன் இப்போது 125 Hz ஆகும். முனைத் திருத்தங்களைப் புறக்கணித்து, வளியில் ஒலியின் வேகத்தையும் குழலின் ஆரம்ப நீளத்தையும் காண்க?

(ஆ) 1. அநேகமான மின் அடுப்புக்கள் மூவூசிச் செருகியொன்றுக்கு இணைக்கப்பட்டிருக்கும். மூவூசிச் செருகியிலிருந்து அடுப்பிற்கு எவ்விதம் கம்பிகள் இணைக்கப்பட்டிருக்குமென விபரித்து மின்னதிர்ச்சிகளைத் தவிர்ப்பதற்கு இத்தொகுதி எவ்விதம் உதவிபுரியுமென விளக்குக?

2. புளோரொளிர்வுக் குழாயொன்றில் (உறிஞ்சியொளி வீசுங்குழாய்) ஒளியுண்டாகும் முறையை விளக்குக? புளோரொளிர்வுக் குழாய்க்குத் தொடக்கியும் தடுக்கியும் (அடைப்பு) எவ்விதம் இணைக்கப்படும் என்பதை, வரிப்படமொன்றின் உதவியுடன் காட்டி, இக்குழாயை ஒளி பெறுவதற்கு இவை எவ்விதம் உதவுகின்றன என்பதைச் சுருக்கமாக விளக்குக?

3. மின் காய்ச்சியிணைத்தல் (eleetric weldimg) பழுதுறை நிலை மாற்றி மின் பிரயோகத்தை விளக்குக?

விடை:-

4. (அ) திறந்த அல்லது ஒரு முனை மூடிய பரிவுக்குழாய்ப் பரிசோதனை விபரிக்கப்படலாம்.
பரிவுக்குழாயின் நீளம் l என்க.
அதிர்வெண்ணின் இழிவுப் பெறுமதியில் அலைநீளம் உயர்வாகும்.
அதாவது (சுரம் அடிப்படைச்சுரம்)



(1) (11) (111)

$\lambda = 4l$ வளியில் ஒலியின் வேகம் $V\ cm\ s^{-1}$ எனின் $V = n\lambda = 170 \times 4l$ --(1)

(1), (2) இலிருந்து $170 \times 4l = 125 \times 4(1 + 18)$

$170l = 125\ (1 + 18)$

$l = 50$ cm

(1) இலிருந்து $V = 170 \times 4 \times 50$

$= 34 \times 10^{3}$ cm $s^{-1}$

1. L கம்பி வெப்பமாக்கும் சுருளின் ஒரு முனைக்கும் N கம்பி மறுமுனைக்கும் இணைக்கப்படும் புவித்தொடுப்புக் கம்பி அடுப்பின் வெளி ஓட்டுக்கும் இணைக்கப்படும். இதனால் அடுப்பினதும், பயன்படுத்துபவரினதும் மின்னழுத்தம் புவிப்பரப்பின் மின்னழுத்தம் 0 இற்கு சமமாக இருக்கும்.




தடுக்கி ஒளிர்வு (சுற்று) (படலோட்டம்)

ஓர் மின்சுற்றில் தொடுகையுடன் இல்லாத இரு தட்டுக்களுக்கூடாக மின் ஓட்டம் செல்லும்போது உண்டாகும் மின் பாய்ச்சலினால் ஓர்வாயு அயனாக்கப்படுகின்றது. இந்நிகழ்வில் இலத்திரன்கள் தம் இடத்துக்கு மீண்டும் மீண்டும் மீளும் இயல்பினால் ஒளி பிறப்பாக்கப்படுகின்றது. இப்பிறப்பாக்கப்பட்ட ஒளி உறிஞ்சியொளிவீசும் குழாயின் உட்பரப்பில் பூசப்பட்ட புளோரொளிர்வுத் துணிக்கைகளில் விழுவதனால் வெண்ணொளி உண்டாகின்றது.

K மூடப்பட்டதும் KLXASBYK வழியே மின்னோட்டம் பாயும். இதனால் நியோன் வாயுவினூடாக மின்னோட்டம் பாயும். S இல் உள்ள தொடுப்புக்களின் இடைத்தூரம் குறைவானபடியால் (குறைந்த அமுக்கத்தில் உள்ள) நியோன் வாயு இலகுவாக அயனாக்கப்படும். இது நடைபெறும்போது நியோன் வாயுவினது வெப்பநிலை அதிகரிக்கும். இதனால் ஈர் உலோகச் சட்டம் உயர்வெப்பநிலையை அடைந்து வளைவதனால் தொடுப்பு ஏற்படும். எனின் S இல் தொடுப்புக்களின் இடைவெளி மூடப்படும். இப்போது மின்னோட்டம் அவ்வுலோகச் சட்டத்தினூடாக S ஐ கடந்து செல்லும். இதனால் நியோன் வாயு பின்னர் குளிர்ந்தொடங்கும். எனின் S மீண்டும் திறக்கும்.

இதனால் மின்னோட்டம் சடுதியாகத் தடைப்படுவதனால் L இனூடான (காந்த) பாயத்தில் மாற்றம் ஏற்படும். இதனால் மின்னேற்றிய மின் இயக்க விசை, X, Y இற்கிடையே தோன்றுகின்றது. இது ஒளிர்வுக் குழாயினுள் வாயுத் துணிக்கைகளை அயனாக்கப் போதுமானது. எனின் இப்போது சுற்றின் மின் ஓட்டம் S இலும் பார்க்க இலகுவான பாதையைப் பெறுகின்றது.

அதாவது S ஆனது உறிஞ்சி ஒளிர்வீசும் குழாயினுள் அமுக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாத்திரம் உதவுகின்றது.

3. படி இறக்கி மின்மாற்றி, மின்காட்சி இணைப்புக்கிடையே மிகக் குறைந்த மின்னழுத்தத்தை வழங்கி மின்னோட்டத்தை உயர்வாக்கும். இதனால் வெப்பக் கூறியம் அதிகரித்து வெப்பநிலை உயரும்.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

(5) ஒரு தெரியாத்தடை X ஐப் அளவிடப் பாவிக்கக்கூடிய வீற்ஸ்ரன் பால அமைப்பொன்றை வரிப்படம் காட்டுகின்றது. இப்பாலம் சமநிலையிலுள்ள போது, நான்கு தடைகளுக்குமிடையிலான தொடர்பை, முதற் தத்துவங்களிலிருந்து தருவிக்குக?




$E = 4.0\ V$, $R = 10.0\,\Omega$ ஆயிருக்கையில் $R_2 = R_3 = 20.0\,\Omega$

ஆகும்பொழுது பாலம் சமநிலையில் இருக்குமாயின் X ஐக் காண்க?
இப்போது R புதிய பெறுமதி 11.0 Ω க்கு மாற்றப்படுகிறது.
கல்வனோமானியின் தடை 10.0 Ω ஆகவும் கலத்தின் அகத்தடை பூச்சியமாகவுமிருப்பின் கல்வனோமானிக்கூடாகப் பாயும் ஓட்டத்தைக் கணிக்குக?

தடை X இப்போது நீக்கப்பட்டு, அதன் இடத்தில் இக்கல்வனோமானி புள்ளிக்கும் B க்கும் C க்குமிடையில் இணைக்கப்படுகிறது. புள்ளிகள் B க்கும் D க்குமிடையில் இரண்டாவது ஆளி S இணைக்கப்படுகிறது. கல்வனோமானியினது தடையின் பெறுமதியை எவ்விதம் நீர் சரிபார்ப்பீர்?

விடை:-

5. பாலம் சமநிலையில் இருக்கும்போது கல்வனோமானியின் வாசிப்பு பூச்சியமாகும்.




$\therefore V_B = V_D$

$V_A - V_B = i_1R_1$
$V_A - V_D = i_2R_2$
$i_1R_1 = i_2R_2$ ..............(1)

$V_B - V_C = i_1X$
$V_D - V_C = i_2R_3$
$i_1X = i_2R_3$ ..............(2)

(1)/(2) — $\boxed{R_1/X = R_2/R_3}$

$E = 4V$, $R = 10\,\Omega$, $R_2 = R_3 = 20\,\Omega$ $\quad 10/X = 20/20$ ; $\quad X = 10\,\Omega$

கல்வனோமானியினூடான மின்னோட்டம் $i_g$ என்க.
கிர்க்கோப்பின் விதியிலிருந்து
சுற்று ABDA
$11\,i_1 + 10\,i_g - 20\,i_2 = 0$ -- (1)
சுற்று BCDB
$10(i_1 - i_g) - 20(i_2 + i_g) - 10\,i_g = 0$
$i_1 - 4\,i_g - 2\,i_2 = 0$ ——— (2)




சுற்று ADCA
$20\,i_2 + 20(i_2 + i_g) = 4$
$10\,i_2 + 5\,i_g = 1$ ——(3)

(1) − (2) x 11 ⟶
$54\,i_g + 2\,i_2 = 0$
$27\,i_g + i_2 = 0$ ——(4)

(4) x 10 − (3) ⟶
$270\,i_g - 5i_g = -1$, $265\,i_g = -1$
$i_g = -1/265\ A$

கல்வனோமானியினூடாக D யிலிருந்து B வழியே பாயும் மின்னோட்டம் 1/265 A ஆகும். சாவி $S_1S_2$ இரண்டையும் மூடுக.
... ஆகப் பேணுக.
R ... R = 20 Ω

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

பின்னர் $S_2$ வை மூடித்திறக்கும் ஒவ்வொரு முறையும் (G) இன் திரும்பல் மாற்றமில்லாமல் இருக்கும்வரை $R_1$ ஐ செப்பஞ்செய்க. அதாவது இந்நிலையில் S னூடாக மின் ஓட்டம் இல்லை ∴ பாலம் சமநிலையில்

∴ $R_1$ = (G) இன் தடையாகும்




(6). நிலைமின்னியலில் கவுசின் தேற்றத்தைக்கூறி, ஒரு புள்ளி ஏற்றம் q விலிருந்து r தூரத்திலுள்ள மின்பாயவடர்த்தியைக் கணிப்பதற்கு அதனைப் பாவிக்குக. $\rho\ cm^{-3}$ உடைய சீரான மறை(எதிர்) ஏற்றப் பரம்பலொன்று வெளிப் பிரதேசமொன்றினுள் இருக்கிறது. இப்பிரதேசம் a மீற்றர்கள் உள்ளாரையையும் b மீற்றர்கள் வெளியாரையையுமுடைய கோளவோட்டு வடிவத்திலுள்ளது. பின்வரும் புள்ளிகளிலே உள்ள மின்பாயவடர்த்தியின் பருமனையும் (E) திசையையும் காண்க?

1. $r < a$ 2. $a < r < b$ 3. $r > b$

இங்கு r ஓட்டை உருவாக்கும் கோளங்களின் மையத்திலிருந்துள்ள தூரத்தைக் குறிக்கிறது.

விடை :-

6. கோசின் தேற்றம்:
எவ்வடிவத்தில் உள்ள மூடியமான ஓர் பரப்பிலிருந்து வெளியேறும் பாயம் $q/\varepsilon_0$ இற்கு சமனாகும். இங்கு q பரப்பினுள் உள்ளடக்கப்பட்ட மொத்த ஏற்றமாகும்.

q இலிருந்து r தூரத்தில் உள்ள புள்ளியில் மின்பாய அடர்த்தி E எனின்.




r ஆரையையுடைய கோளவடிவில் கோசின்பரப்பு

∴ கோசின் தேற்றப்படி

$$4\pi r^2 E = q/\varepsilon_0$$

$$\therefore E = 1/4\pi\varepsilon_0 \cdot q/r^2$$




1. $r < a$
r ஆரையுடைய கோளவடிவ கோசியன் பரப்பைக் கருதுக.
எனின் $4\pi r^2 \times E = 0$
(உள்ளடக்கப்பட்ட ஏற்றம் பூச்சியம்)
$E = 0$

2. $a < r < b$
ஒட்டினுள் அதே பரப்பைக் கருதின்
$4\pi r^2 \times E = 4/3\pi(r^3 - a^3)\rho \times 1/\varepsilon_0$

$$E = \frac{\rho}{3\varepsilon_0}(r - a^3/r^2)$$

$$E = \frac{\rho}{3\varepsilon_0}(r - a^3/r^2)$$

3. $r > b$ ஒட்டிற்கு வெளியே இப்பரப்பைக் கருதின்,
$4\pi r^2 \times E = 4/3\pi(b^3 - a^3)\rho \times 1/\varepsilon_0$ $E = \frac{(b^3 - a^3)\rho}{\ldots 2}$ = $E = \frac{\rho(b^3 - a^3)}{3\varepsilon_0 r^2}$

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner